| | |
|---|---|
| த.பொ. | |
| இ.த.பொ. | |
| ஆ.சி. | |
| த.வ.அ. | |
| க.கா. | |

**சுருக்கம்**


கட்டடங்கள் – தனியார் கட்டடங்களில் இயங்கும் அரசு அலுவலகங்கள் – பணியாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தேவைப்படும் அலுவலக இடப்பரப்பு – மாற்றியமைத்து நிர்ணயித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.


---

**பொதுப்பணி(எச்1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 54**

நாள் 25.2.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042,
மாசி 13

**படிக்கப்பட்டது:**

1) அரசு ஆணை (நிலை) எண் 1274, பொதுப்பணித்துறை, நாள் 17.5.61.
2) அரசு ஆணை (நிலை) எண் 884, பொதுப்பணித்துறை, நாள் 12.5.1970.
3) அரசு ஆணை (நிலை) எண் 2123, பொதுப்பணித்துறை, நாள் 28.9.1983.
4) தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை கடித எண் தவஅ(அ)/34496/2007, நாள் 19.12.2008, 21.8.2009 மற்றும் 24.6.2010.

-----

**ஆணை:**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு ஆணையில் தனியார் கட்டிடங்களில் இயங்கும் அரசு அலுவலகங்களுக்கு இட அளவுகோலினை நிர்ணயித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு ஆணையில், பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலான இட அளவில் கூடுதலாக 20 சதவிகிதம் இட அளவு, அதிகபட்சமாக 300 சதுர அடிக்கு மிகாமல் ஆவணங்கள் / பொருட்கள் / எழுதுபொருட்கள் வைப்பதற்கான அறை, உணவு அறை, கூட்ட கூடம், பார்வையாளர் கூடம் ஆகியவற்றிற்காக அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. தற்போது கணினி மற்றும் நவீன அறைகலன்கள் உபயோகப்படுத்தப்படும் சூழ்நிலையில், கட்டுமானங்களுக்கு ஆகும் செலவினங்கள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு இருக்கின்ற இடத்தை முழு அளவில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மேலே ஒன்றாவது மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் அடிப்படையிலான இட அளவுகோலினை திருத்தி அமைக்கலாம் என்று அரசு கருதியது. அதன்படி தலைமைப் பொறியாளர்(கட்டடம்) அவர்களின் அறிக்கையை அரசு கோரியது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் தலைமைப் பொறியாளர்(கட்டடம்) அவர்கள் தனியார் கட்டிடங்களில் இயங்கும் அரசு அலுவலகங்களுக்கான பணியாளர் அடிப்படையிலான இட அளவு கோலினை திருத்தி நிர்ணயிக்க தலைமை கட்டட கலைஞர் அவர்களை கலந்து ஆலோசித்து, அறைகலன்கள் அமைப்பது, அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான வசதிகளை அளிப்பது தொடர்பான விவரங்கள் மற்றும் அளவுகள் குறித்த வரைபடம் எண் 4772ன்படி (Job No. 4772 வரைபடம்–1) கருத்துரு அரசிற்கு அனுப்பி அதற்கு அரசின் ஒப்புதலை கோரியுள்ளார்.

5. மேலே பார்வை நான்கில் காணும் தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்களது கருத்துருவினை பரிசீலித்த அரசு அதனை ஏற்று தனியார் கட்டிடங்களில் இயங்கும் அரசு அலுவலகங்களுக்கான பணியாளர் அடிப்படையிலான இட அளவுகோலினை பின்வருமாறு திருத்தி நிர்ணயித்து ஆணையிடுகிறது:

| வ. எண் | பதவியின் பெயர் | நிர்ணயிக்கப்படும் இட அளவு | |
|---|---|---|---|
| 1. | துறைத்தலைவர் | 288 ச.அடி | 26.8 ச.மீ |
| 2. | காவல்துறை ஆய்வாளர் | 200 ச.அடி | 20 ச.மீ. |
| 3. | நேர்முக உதவியாளர் மற்றும் இதர அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள் | 124 ச.அடி | 11.50 ச.மீ |
| 4. | மேலாளர், கண்காணிப்பாளர் மற்றும் அரசிதழ் பதிவு பெறாத பிரிவுகளின் தலைமை அலுவலர்கள் | 68 ச.அடி | 6.30 ச.மீ |
| 5. | அரசிதழ் பதிவுபெறாத தொழில் நுட்ப பணியாளர்கள் | 62 ச.அடி | 5.75 ச.மீ |
| 6. | உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் | 36 ச.அடி | 3.33 ச.மீ |
| 7. | உதவியாள் (Attender) | 20 ச.அடி | 2 ச.மீ |

6. மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலான இட அளவில், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி வழங்கப்பட்ட 20 சதவிகித கூடுதல் இட அளவு, அதிக பட்சமாக 300 சதுர அடிக்கு மிகாமல், ஆவணங்கள் / பொருட்கள் / எழுது பொருட்கள் வைப்பதற்கான அறை, உணவு அறை, கூட்ட கூடம், பார்வையாளர் கூடம் ஆகியவற்றிற்காகவும் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலும் அறைகலன்கள் இதர பொருட்களை அமைப்பது குறித்த விவரங்கள் மற்றும் அளவுகள் குறித்த வரைபடத்திற்கு (Job No. 4772 வரைபடம்-1) ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

8. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சாரா பற்ற எண் 135/SS(RT)/P.W-I/10, நாள் 18.10.2010ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர்(கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர்(கட்டடம்),
சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சென்னை-5.
✓அனைத்துத்துறை தலைமை அலுவலகங்கள்.
அனைத்துத்துறை செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை.
மாநிலக்கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை.
தலைமைச்செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
பொதுப்பணித்துறையின் அனைத்து பிரிவுகள், தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதி(பொ.ப.I) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25/2/2011
பிரிவு அலுவலர்.

25/02/2011